REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 19உ சனி (5—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 20உ ஞாயிறு (6—11—55) [இதழ் 123

சிறந்த பணி புரியும் தொழிலாளருக்கு பட்டமளிப்பாம்!

ஐதராபாத், நவ. 4—

தங்கள் தொழிற்சாலைகளில் சிறப்பான பணியாற்றும் தொழிலாளருக்கு 'சிரம பண்டிட்' என்ற பட்டம் வழங்கப்படலாம் என்றும் தொழிலாளர்கள் கடுமையாக உழைக்க ஊக்குவிப்பதற்காக இத்தகு பட்டங்கள் வழங்கலாமென்றும் இங்கு நடைபெற்ற தொழிலாளர் இலாகா மந்திரிகள் மாநாடு ஒன்றில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

'சிரம பண்டிட்' என்ற பட்டத்தை மாநாடு அங்கீகரித்திருக்கிறது.

பக்ரா-நங்கல் திட்டத்தில் மோசடி!

கணக்கு முழுமையும் பரிசீலிக்க உயர்தர அதிகாரக் குழு!

துப்பறியும் போலீசார் தீவிர விசாரணை

சந்திகார், நவ. 3—

சுமார் ரூ. 100 கோடிக்கும் அதிகமான செலவில் நிறைவேற்றப்பட்டு முடிவடைந்துவரும் அணைக்கட்டுத் திட்டமான பக்ரா—நங்கல் அணைக்கட்டில் பொறுப்பு மிகுந்த 'எஞ்சினியர்'கள் உட்பட பல அதிகாரிகள் ரூ. 10 கோடி வரை மோசடி செய்துள்ளதுடன், பெரும் இலஞ்சப் பழக்கமுடையவர்களாயுமிருந்தனர் என்பதால், சென்ற திங்களில் கைது செய்யப்பட்டது நினைவிலிருக்கலாம். அதனைத் தொடர்ந்து, பக்ரா-நங்கல் அணைக்கட்டு வேலையில் நடைபெற்ற அந்த ஊழல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக உயர்தர அதிகாரமுடைய ஒரு குழு நியமிக்கப்படுவதாக, பஞ்சாப் நீர்ப்பாசன இலாகா மந்திரி சௌத்ரி லெஹ்ரி சிங் தெரிவித்திருக்கிறார்.

பக்ரா-நங்கல் திட்டத்தின்கீழ் நடைபெறும் பல வேலைகளுக்கான கணக்குவழக்குகள் முழுவதையும் மீண்டும் பரிசோதனை செய்யவும், அதன்மூலம் இலஞ்சப் பழக்கங்களுக்கு ஒரு முடிவு கட்டவும், ஏற்பாடு செய்யப்போவதாயும் அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

அண்மையில், மத்திய சர்க்கார் திட்ட இலாகா மந்திரி குல்ஜாரிலால் நந்தாவை, தான் சந்தித்ததாயும், அவரும் இந்த நிலைகள் குறித்து வருத்தம் தெரிவித்ததாயும் மந்திரி லெஹ்ரி சிங் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், சில வட்டாரங்கள் அறிவித்துள்ளபடி ரூ. 10 கோடி வரை மோசடி நடைபெற்றது என்று கூற முடியாது என்றும், அவ்வளவு பெரிய தொகையை மோசடி செய்வது சுலபமானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போது விசாரணை நடத்துவதற்காக இதர மாநிலங்களைச் சேர்ந்த எஞ்சினீயர்கள் வரவழைக்கப்படுவார்கள் என்றும், கணக்குகள் முழுவதையும் அவர்கள் பரிசீலிப்பர் என்றும் மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

பஞ்சாப் போலீஸ் இலாகா தலைமை அதிகாரியின் தலைமையில் இயங்கும் துப்பறியும் இலாகாவினர் நேரடியாகப் பல இடங்களில் பெறும் வர்த்தக நிறுவன நிர்வாகிகளையும், சர்க்கார் அதிகாரிகளையும் விசாரணை செய்து வருகின்றனர் என்பதும், சர்க்கார் புதிதாக நியமித்துள்ள இலஞ்ச ஒழிப்பு இலாகாவினரும் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர் என்பதும் ஏற்கனவே வெளிவந்த செய்திகளாகும்.

'தமிழர்களைப் புறக்கணிக்கும் திரு - கொச்சி சர்க்கார்'

குற்றச்சாட்டுக்கு மறுப்பு

திருவனந்தபுரம், நவ. 4—

பொதுப் பணிக்கு நபர்கள் தேர்ந்தெடுத்தலில் தமிழர்களுக்கு உரிய பங்கு தரப்படுவதில்லை என்றும், பதவி உயர்வு தருவதில் தமிழர்கள் முழுவதுமாகப் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படும் குற்றச்சாட்டை திரு—கொச்சி சர்க்கார் மறுத்துரைத்திருக்கின்றனர்.

'குற்றச்சாட்டுகள் தவறானவை—ஆதாரமற்றவை,' என்றும் கூறப்பட்டதாம்.

திரு—கொச்சி சர்க்கார், பணித் தேர்விலும், பதவி உயர்வு தருவதிலும் தமிழர்களைப் புறக்கணிக்கும் ஒரு படுமோசமான கொள்கையைக் கடைப்பிடித்து வருவதாக திரு—தமிழக காங்கிரஸ் தலைவர் ஏ. குஞ்சன் (நாடார்) எம். எல். ஏ., குற்றம் சாட்டியிருந்ததற்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்த மறுப்பு அமைந்திருக்கிறது.

'டிக்கெட்' இல்லா பிரயாணிகள்!

17,600 பேர் தண்டிக்கப்பட்டனர்

ஓராண்டில் ஒரு வட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டோர்

புதுடில்லி, நவ. 3—

கடந்த 1955 ஜூன் திங்களுடன் முடிந்த ஓராண்டுக் காலத்தில் மேற்கு வட்டார இரயில்வேயில் டிக்கெட் இன்றி பிரயாணம் செய்த 12,000 பேர் அபராதம் விதிக்கப்பட்டதுடன், மேலும் 5,600 பேர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

ஒரு மாகாண நீதிபதியும், மற்றும் நான்கு உதவி நீதிபதிகளும் இந்த விசாரணைக்காக பம்பாய் சர்க்காரால் ஒதுக்கித் தரப்பட்டிருக்கின்றனர் என்றும், இவர்களுக்கு உதவியாக போலீஸ் இரயில் இலாகா அதிகாரிகள் இருப்பர் என்றும் தெரியவருகிறது.

நாளுக்கு நாள், டிக்கெட்டில்லாப் பிரயாணம் அதிகரித்து வருவதினாலேயே இந்த ஏற்பாடு என்றும் கூறப்படுகிறது.

ஓராண்டில், ஒரு வட்டத்தில் கண்ணில்பட்டோர் எண்ணிக்கை இது என்று தெரியும்போது, இதர வட்டங்களிலும் கண்ணில் படாதோருமாக எத்தனை பேரோ?

அங்கும் 'மூல்தானி' பரம்பரையினரா?

கராச்சி, நவ. 4—

பாகிஸ்தானில் உள்ள ஆப்கன் லேவாதேவிக்காரர்களைக் கைது செய்து, அவர்களுடைய தொழில் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும், அவர்கள் தங்களுக்கு 30 சதவிகிதம் வட்டி வாங்குவதாயும் சர்க்கார் சார்புள்ள 'டான்' இதழ் தலையங்கம் ஒன்று தீட்டியுள்ளது.

விவசாயக் கடன்கள்

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தருவதற்கு ஏற்பாடு

புதுடில்லி, நவ. 4—

தரப்படும் விவசாயக் கடனில் 20 முதல் 25 சதவிகிதம் வரை கூட்டுறவு இயக்கத்தின் மூலமே தருவதற்குத் திட்டம் வகுத்திருப்பதாக மத்திய சர்க்கார் விவசாய இலாகா அமைச்சரவை தெரிவிக்கிறது.

இது இரண்டாம் திட்டகால இறுதிக்குள் நிறைவேறிவிடும் என்றும் கூறப்படுகிறது.

விவசாயக் காரியங்களுக்காக ஆண்டுதோறும் எதிர்பார்க்கப்படும் கடன் தொகையின் மொத்த அளவு ரூ. 750 கோடி என்றும், இப்போது இதில் 3 சதவிகிதம் மட்டுமே கூட்டுறவு இயக்கத்தின் மூலம் வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் எல்லையோர ஏற்பாடு

போலீசாருக்கு நவீன ஆயுதங்கள்

லாகூர், நவ. 5—

ஆப்கன் எல்லை முழுவதிலும், பாகிஸ்தான் இராணுவத்தினர் தனி ஏற்பாடுகளைச் செய்து வருவதாகக் குவெட்டாவிலிருந்து தகவல் தரப்படுகிறது.

எல்லையில் உள்ள பாகிஸ்தான் போலீசாருக்கு நவீன ஆயுதங்கள் தரப்படுகின்றனவாம்.

ஆப்கனிஸ்தானத்தில் நிலையற்ற சூழ்நிலை நிலவுவதாலேயே எல்லைக்கு ஆபத்து ஏற்படலாம் என அஞ்சி இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று கூறப்படுகிறது.

எல்லைப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயலும் எவரையும் ஒடுக்கிவிடும்படி, எல்லைப் போலீசாருக்கு கண்டிப்பான உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

செயற்கரிய செயல்!

லண்டன், நவ. 4—

ஒரு பிரிட்டிஷ் விமான நிறுவனத்தைச் சேர்ந்தவரும், விமானங்களைப் பரிசோதனை செய்பவருமான ஜே. எஸ். பீபில்கு என்பார் 7½ மைல் உயரத்திலிருந்து 'பாரசூட்' மூலம் குதித்து ஒருவித ஆபத்துமின்றி கீழிறங்கியிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யத் தலைவர்கள் இந்தியா வருகை!

மாஸ்கோ, நவ 4—

சோவியத் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் இருவரும் இமயத்தைக் கடந்து விமான மூலம் இந்தியாவிற்கு நவம்பர் 18-ந் தேதி போய்ச் சேருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. உஸ்பெக்கிஸ்தான் தலைநகரான டாஷ்கெண்டிலிருந்து ரஷ்யத் தலைவர்கள் ஒரு சோவியத் விமானத்தில் இந்தியா செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் இந்தியாவில் 20 நாட்கள் தங்குவர் என்றும், இடையில் ஒரு கிழமை பர்மாவில் சுற்றுப் பயணம் செய்வர் என்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் மந்திரி சபைக்குள் கருத்து வேறுபாடு!

வட்டார சுதந்திர மசோதாவே காரணம்!

கராச்சி, நவ. 5—

மந்திரி சபையினர் தயாரித்துள்ள அரசியல் நிர்ணய மசோதாவை, நவம்பர் 7-ந் தேதியன்று அரசியல் நிர்ணய சபைமுன் வைப்பதில் தகராறு எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த நகல் மசோதாவை அங்கீகரித்த மந்திரி சபைக் கூட்டத்தில் சில வங்காள மந்திரிகள் கலந்துகொள்ளவில்லை என்றும், இப்போது அவர்கள், இந்த மசோதா கொண்டுவரப்படுமுன் வட்டார சுதந்திரத்திற்கான மசோதாவைக் கொண்டு வந்துவிடவேண்டும் என்றும் கூறுகின்றனராம்.

அரசியல் நிர்ணய சபையில் உள்ள வங்காள உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி, வட்டார சுதந்திர மசோதா முதலில் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் கோருகின்றனராம்.

இந்த மசோதா முதலில் வராமல் செய்வதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு வங்க மந்திரிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர் என்றும், எப்படியேனும் முதலில் அரசியல் நிர்ணய மசோதா வந்துவிடவேண்டும் என்றும் மந்திரிகள் கருதுகின்றனராம்.

மேற்கு பாகிஸ்தான் முழுவதும் ஒரே மாநிலமாகிற மசோதாவைப் போல், வட்டார சுதந்திர மசோதாவும் அரசியல் நிர்ணய மசோதாவிற்கு முன்பே நிறைவேற்றப்பட்டுவிடவேண்டும் என்று உறுப்பினர்கள் கருதுகின்றனராம்.

யூ-நூ, புல்கானின் கூட்டறிக்கை

மாஸ்கோ, நவ. 3—

ரஷ்யாவில் இரு கிழமைகள் சுற்றுப்பயணம் செய்து தலைநகர் திரும்பிய பர்மியப் பிரதமர் யூ-நூவும், ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானினும் கூட்டாக அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

அகில உலக மேற்பார்வைக்கு உட்பட்டு சம்பிரதாய ஆயுதங்களைக் கணிசமாகக் குறைக்கவேண்டும் என்றும், அணு ஆயுதங்களின் உற்பத்தியையும், சோதனையையும் நிபந்தனையின்றி தடை செய்ய வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'நகர சுத்தம் செய்யும் தொழில் ஒழிய வேண்டும்'!

ஜெகஜீவன்ராம் செப்புகிறார்

போபால், நவ. 4—

"நகர சுத்தம் செய்யும் தொழில் சீக்கிரமே ஒழிக்கப்படவேண்டும்; அந்த வேலையை சமுதாயத்தின் ஒரு பிரிவினரையே தொடர்ந்து செய்யச் செய்வது, மனிதாபிமானத்திற்கு முரண்பட்டதாகும்."

என்று, செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

மாநில சர்க்கார் ரூ. 99,000 செலவில் கட்டிய இரண்டு அடுக்குமாடி கட்டிடம் ஒன்றை தாழ்த்தப்பட்டோர் குடியேறுவதற்காகத் திறந்துவைக்கும்போதுதான் அவர் அம்மாதிரிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தக் கட்டிடத்தில் 33 குடிகள் வசிக்க முடியும் என்றும், அதற்கு 'தக்கர் பாபா இல்லம்' என்று பெயரிடப்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

"நாடு முன்னேறுவதற்கு மக்கள் தங்களிடமுள்ள சாதிப் பித்தங்களை ஒழித்துக் கட்டவேண்டும்" என்றும் மந்திரி ஜெகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—11—'55 சனி

ஜனநாயகம் படும்பாடு!

மக்கள் அனைவருக்கும் ஒத்த உரிமையும், வாழ்வும் பெற்றுத் தருவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சீரியதோர் ஆட்சிமுறையான ஜனநாயகம், காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஆட்சியில் படும்பாடு சொல்லுந்தரமன்று!

ஜனநாயகத்தின் பேரால்—ஆட்சிப் பீடமேறியிருக்கும் காங்கிரசார், ஜனநாயகத் தத்துவத்திற்கே புதிய புதிய—ஒன்றுக்கொன்று முரண்படுகிற வியாக்கியானங்களைத் தருவதையும் பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஜனநாயகக் கோட்பாடுகள் எத்தனை முறை கேலிக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை கடந்த எட்டாண்டு காலமாக காங்கிரசார் நடத்திவரும் ஆட்சி நமக்குத் தெளிவாகச் சொல்லும் அத்தகு சம்பவங்கள் குறித்து நாம் அவ்வப்போது இங்கு எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

சென்னை பெரம்பூர் பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள், தங்களின் சில கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த அறிவிப்பைப் புகலாகக் கொண்டு சென்னை போலீஸ் 'கமிஷனர்' நகர போலீஸ் சட்டப்படி நகரில் எங்கும் ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்தக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர், சில கோரிக்கைகளுக்காக—ஆலை முதலாளிகளை எதிர்த்து!

வேலை நிறுத்தத்தில் ஈடுபடு முன்பே சர்க்கார் தடை உத்தரவு விதிக்கிறது—நகரில் கூட்டங்களும், ஊர்வலமும் நடத்தக் கூடாதென! இதற்குக் காரணமாக, 'பொதுமக்களின் அமைதியும், பாதுகாப்பும் பாதிக்கப்படலாம்' என்று கூறுகிறது.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது, அமைதி பாதிக்கப்படுவதாக சர்க்கார் வருந்தி ஒரு எண்ணத்தை வரவழைத்துக்கொள்வது ஏன்? தாங்கள் நியாயம் என்று கருதும் காரணங்களுக்காகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்; அந்த உரிமை ஒரு ஜனநாயக நாட்டில் அவர்களுக்கு இருந்தாக வேண்டும்.

வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைக்கு சேதம் ஏற்படக்கூடாது என்று கருதி அதற்குப் பாதுகாப்புத் தர நினைப்பதுபோல், தொழிலாளர்கள், தங்கள் நலனுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதாக உணர்ந்து அந்த பாதகத்தைப் போக்கிக் கொள்ள முற்படும்போது; சர்க்கார் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது நியாயமாயிற்றே? ஆனால், சர்க்காரோ, நகர் முழுதும தடை விதிக்கிறது—ஒரு பகுதியில் நடைபெறும் வேலை நிறுத்தத்திற்காக! என்ன நியாயம்?

தொழிலாளர்களின் நலனுக்கு பாதுகாப்புத் தர வேண்டிய பொறுப்புடைய சர்க்கார்-ஜனநாயகத்தின் பேரால் ஆட்சியிலிருக்கும் சர்க்கார்—'சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படுவர்' என்று கூறும்அரசியல் சட்டத்தின்படி ஆட்சி நடத்துவதாகக் கூறும் சர்க்கார், என்ன சமாதானம் கூறுவார்களோ இந்தத் தடை உத்தரவுக்கு—நமக்குத் தெரியாது.

மேலும், அந்தத் தடையுத்தரவு, குடியரசுத் தலைவர், கவர்னர், மந்திரிகள் ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டங்களையோ, ஊர்வலங்களையோ பாதிக்காதாம்.

மந்திரிகள், மக்களிடமிருந்து அதிகாரம் பெற்றவர்கள் என்பதைத் தவிர, வேறு எந்த வகையில் மக்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்பது நமக்குப் புரியவில்லை. 'பிரதிநிதித்துவத் தகுதி பெற்றவர்கள்' என்று கூறுவதானாலும், சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் அந்தத்தகுதி பெற்றவர்கள்தானே! அல்லது, மந்திரிகள் கலந்து கொள்ளும் கூட்டங்கள், ஊர்வலங்கள் இவற்றினால் பொதுமக்களின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படுவதில்லை என்பதற்கு ஏதேனும் நிரூபணம் உண்டா? பின் ஏன் மந்திரிகள் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு மட்டும், இந்த தடை உத்தரவிலிருந்து விலக்களிக்க வேண்டும்? சட்டம் என்றால், அதன் ஆக்ஞைக்கு ஆட்பட்டவர்களாக எல்லா மக்களும் இருக்க வேண்டும். 'ஆள்வோருக்கு ஒரு விதி—ஆளப்படுவோருக்கு ஒரு விதி' என்பது, ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரண்பட்ட ஒன்று என்றுதான், ஜனநாயக ஆட்சி முறையில் ஊறித்திளைத்த பலர் கூறக்கேட்டிருக்கிறோம். ஆனால், 'இந்த நிலைகளைக் குறித்தெல்லாம் காங்கிரஸ் ஆளவந்தார்கள் கவலைப்படமாட்டார்கள்' என்று, எதேச்சாதிகார எண்ணம் கொண்டுவிட்ட அவர்களை உணர்ந்த நமக்கு நன்கு தெரியும்.

இன்று மந்திரிகளுக்கு விலக்களிப்பவர்கள், நாளை, காங்கிரஸ்காரர்களுக்கு சேர்த்தும் விலக்களித்து, காங்கிரசார் தவிர வேறெ வரும் கூட்டம் கூடக் கூடாது' என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை; ஏனெனில், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெறும் கூட்டத்திற்குப் பொதுமக்கள் சொத்தான கோட்டை மதிலை உபயோகிக்க அனுமதிக்கப்பட்டது—பண்டிதர் வந்திருந்த போது! இதர கட்சியினருக்கு, நகருக்குள் உள்ள சிறு சிறு மைதானங்களிலேயே கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடைப்பதில்லை. இத்தகு காங்கிரஸ் எதேச்சாதிகாரிகளின் ஆட்சியில், ஜனநாயகம் படாதபாடுபடுகிறது!

'இந்தியா என்ற ஒரு நாடு எப்போதும் இருந்ததில்லை'

'தொல்லைகளைத் தாங்கிக்கொண்டால் இலட்சியத்தை எளிதில் அடைவோம்'

குடந்தை மாணவர்களிடை அண்ணாதுரை விளக்கம்

"கடந்த பத்து ஆண்டுகளில் நம் இயக்கம் வெகுவாக முன்னேறியுள்ளது. இனி, தகுந்த திட்டங்கள் தீட்டி, நம் எண்ணங்களை செயலாற்றுவதில் நாம் ஈடுபட வேண்டும். நாம் நாட்டை பிரிக்க விரும்புவதாக சிலர் எண்ணுகின்றனர்; அது தவறு—நாம் விடுதலை பெற விரும்புகிறோம்; நமக்கென ஒரு நாயகத்தை நிறுவத் திட்டமிடுகிறோம்; மிக்க அண்மைக் காலத்தில் தோன்றியுள்ள ஒரு ஏகாதிபத்தியத்தினின்றும் நாம் விடுதலைபெற விரும்புகிறோம்,"

—என்று, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், 29—10—55ல். குடந்தை போர்ட்டர் நகர மண்டபத்தில், தோழர் டி. மதியழகன் தலைமையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பண்டித நேரு அவர்கள், 'இந்தியாவை கண்டு பிடித்தல்' என ஒரு நூலை எழுதியுள்ளார். அது, பொருத்தமற்ற ஒன்றாகும். 'இந்தியா' என்ற ஒரு நாடு எப்பொழுதும் இருந்ததில்லை.

"நாம் கூறும், 'திராவிட நாட்டை கண்டுபிடித்தல்—அல்லது, திராவிட நாட்டை மீண்டும் காணல்' மிகப் பொருத்தமுடையதாகும். இப்பணியிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். திராவிடம் தனியாட்சி செலுத்தி வந்தமைக்கும், நூற்றாண்டுகட்கு முன்னரே, ஐரோப்பியா, மற்றும் ஆசிய நாடுகளுடன் திராவிடம் வணிகத் துறைகளிலும், அரசியல் துறைகளிலும் தொடர்பு கொண்டிருந்தமைக்கும், அரசியல், மற்றும் வரலாற்று ஆதாரங்கள் பல உள்ளன.

"நாம் தனியரசு காண விரும்புவது தவறானது—ஆபத்தானது—எனக் கூறப் பெறுவது சரியன்று; பெரிய அளவில் கூட்டப்பட்ட உரோம, உதுமானிய, கிரேக்க சாம்ராச்சியங்கள் எல்லாம் சரிந்தேபோயின; சிறிய நாடுகளெல்லாம், தங்களைத் தாங்களே எண்ணிப் பார்த்ததன் விளைவே இந்த சாம்ராச்சியங்களின் சரிவுகளாகும்; பெரிய சாம்ராச்சியங்களால் சிறிய நாடுகட்கு தொல்லை-ஊறு, என்பதே கருத்தாகும்; இதைத்தான் வரலாறுகள் கூறுகின்றன.

'இந்த நிலையில், இந்தியா மட்டும் பெரிய அளவில் இருக்க வேண்டுமென்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. தனிநாடு காணுவது தவறெனில்—ஆபத்து விளையுமெனில், பர்மா தனியரசானதால், என்ன ஆபத்து நேர்ந்துவிட்டது? சில காலத்திற்கு முன்புவரை இந்தியாவுடன் பர்மா சேர்ந்துதானே இருந்தது? நம் காலத்திலேயே பாகிஸ்தான் தனி நாடு பெறவில்லையா? அவர்கள் என்ன ரத்தம் சிந்தியா தனி நாடு அமைத்தனர்? வெறும் அரசியல் தந்திரத்தாலேயே பாகிஸ்தான் ஏற்பட்டுவிடவில்லையா? பின்னர் திராவிடம் பிரிவதில் மட்டும் என்ன தடை? வேண்டுவதெல்லாம் நம்மை நாம் பண்படுத்திக்கொள்ளல் வேண்டும். எந்தத் தொல்லையையும், துன்பத்தையும் நம் குறிக்கோளையடைவதற்காக தாங்கும் நிலையில் நாம் பக்குவம் பெற்றால் திராவிடத் தனியரசு காணுவது மிக எளிதாகும்."

இரயிலை நிறுத்திய மாணவர்கள்

தொடர்ந்து இரயில் தாமதமாக வருவதின் எதிரொலி

லக்னோ, நவ 2—

லக்னோவிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள மால்ஹார் எனுமிடத்தில், பைசாபாத்—கான்பூர் பிரயாணிகள் இரயிலை நிறுத்தியதாக சமார் 13 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் மூன்று முறை இரயில்களை நிறுத்தினராம்; இதனால் மூன்று மணி நேரம் இரயில் தாமதப்பட்டதாம்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள், கடந்த ஒரு திங்களாகவே இரயில் குறிப்பிட்ட நேரத்தில் வருவதில்லை என்றும், அதனால் தாங்கள் கல்லூரிக்குக் காலதாமதமாகப் போக வேண்டியிருக்கிறது என்றும் புகார் செய்திருக்கின்றனர்.

நேற்று பராபக்கியில் சுமார் 35 மாணவர்கள் ஏறியதாகவும், அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து மூன்று முறைகள் இழுத்து இரயிலை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு முறை மாணவர்கள் இரயிலை நிறுத்தவே, தொடர்ந்து அம்மாதிரி செய்யாமலிருக்க, இரயில் வண்டி அதிகாரி அபாய அறிவிப்புச் சங்கிலித் தொடர்பைத் துண்டித்துவிட்டு வண்டியை ஓட்டினார்; ஆனால், மாணவர்கள், அந்த அதிகாரியின் பெட்டிக்குப் பக்கத்திலிருந்த பெட்டியில் ஏறி, அங்கிருந்த 'பிரேக்'கின் துணைகொண்டு மீண்டும் வண்டியை நிறுத்தியிருக்கின்றனர்.

பின்னர், அந்த அதிகாரி லக்னோவிற்குத் தகவல் தரவே, போலீஸ் கோஷ்டி விரைந்து சென்று மாணவர்களைக் கைது செய்திருக்கின்றனர். 13 பேர்கள் மட்டுமே அகப்பட்டனர் என்றும், எஞ்சியோர் தப்பிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

வழக்கமாக இரயிலில் பிரயாணம் செய்யும் பால் வியாபாரிகள், வர்த்தகர்கள், வழக்காடுபவர்கள் ஆகியோரும், இரயில் தொடர்ந்து தாமதமாக ஓடுவது குறித்துப் பெருவாரியான புகார்கள் எழுப்பியிருக்கின்றனர்.

சீனாவுக்குச் செல்வதற்குள்ள தடைகள்

அமெரிக்க சர்க்கார் நீக்கமாட்டார்களாம்!

வாஷிங்டன், நவ. 2—

"பீகிங் சர்க்கார் அமெரிக்க கைதிகள் அனைவரையும் விடுவிக்கும் வரையில் சீனாவுக்குப் பிரயாணம் செய்வதில் விதிக்கப்பட்டுள்ள தடைகளை தளர்த்துவதற்கில்லை,"

என்று, அமெரிக்க அரசாங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் சிலர், சீனாவுக்குப் பிரயாணம் செய்ய அனுமதி கோரியது சர்க்காரால் மறுக்கப்பட்டுவிட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

கேரளம் உயிர்பிழைக்க தேவிகுளம், பீர்மேடு தேவையாம்!

திரு—கொச்சி காங்கிரஸ் தலைவர் பொய்யுரை

சென்னை, நவ 3—

"தேவிகுளம், பீர்மேடு வட்டங்களை சென்னைக்கு விட்டுக் கொடுக்க, மலையாளிகள் தயாராக இல்லை,"

என்று, திரு-கொச்சிப் பிரதேச காங்கிரஸ் தலைவர் ஏ. பி. உதயபானு தெரிவித்திருக்கிறார்.

டில்லியில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளின்போது, தான் திரு-கொச்சியில் உள்ள 5 தமிழ் தாலுகாக்களை தமிழகத்துடன் இணைக்கக்கூடாது என்றும், 'கேரளத்துடன்தான் இணைக்கவேண்டும் என்று வற்புறுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'கேரள மாநிலம் உயிர்பிழைக்க, பீர்மேடும், தேவிகுளமும் இன்றியமையாதவையாகும்,' என்றும் அவர் தெரிவித்தாராம்.

வீணாகும் திரு-கொச்சி ஆற்று நீர்!

பேரம் பேசுகிறார் மாதவமேனன்

எர்ணாகுளம், நவ 4—

திரு-கொச்சி மாநிலத்தில் ஓடும் ஆறுகளின் உபரிநீரைப் பயன்படுத்துவது குறித்த மத்திய சர்க்கார் சீக்கிரமே மசோதா ஒன்று கொண்டுவரவிருப்பதாயும், அந்த மசோதா திரு-கொச்சி சர்க்கார் இணக்கம் தெரிவித்தால்தான் கொண்டுவரப்படும் என்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளரான கே. பி. மாதவமேனன் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சர்க்கார், திரு-கொச்சியில் வீணாகிக் கொண்டிருக்கும் ஆற்று நீரைப் பயன்படுத்திக் கொள்ள திரு-கொச்சி சர்க்காரின் அனுமதி கோரியிருப்பதைக் குறிப்பிட்டு, 'நமது வளங்களை எல்லாம் ஒன்றுகூட்டி நாட்டின் பொது நலனுக்காக அவற்றைப் பயன்படுத்துவதற்குத் திட்டம் வகுக்க வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"கேரளத்திற்குப் பெரும் சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை தரவேண்டியுள்ளது. சென்னை இந்த வகையில் கேரளத்திற்கு உதவ முடியும். இப்போது காலியாகக் கிடக்கும் ஏராளமான நிலப்பரப்பில் கேரள மக்கள் குடியேறி காலனி அமைப்பதற்கு உதவ முடியும்," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி மந்திரி சபைக்குத் தலையிடி!

திரு—தமிழகக் காங்கிரசார், பனம்பள்ளி மந்திரி சபைக்குத் தந்துவரும் ஆதரவை நிறுத்திக் கொள்வர் என்று தெரிகிறது.

மந்திரி சபையில் தி. த. நா. காங்கிரஸ் பிரதிநிதிக்கு இடம் தரப்படவில்லை என்பதாலும், தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்கரை, கொச்சி - சித்தூர் ஆகிய வட்டங்கள் தமிழகத்துடன் இணையவேண்டும் என்ற கோரிக்கையை சர்க்காரும், திரு—கொச்சி காங்கிரசும் தீவிரமாக எதிர்க்கின்றனர் என்பதாலும் இனியும் ஆதரவுதருவதில்லை என்று முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, இப்போது, தனது மந்திரிசபை நீடிக்கவேண்டுமென்பதற்காக, ம. சோ. கட்சியின் தலைவரான பட்டம் தாணுப் பிள்ளையின் தயவை முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் நாடியிருக்கின்றாராம்

118 பேர் கொண்ட திரு—கொச்சி சட்டசபையில், 57 பேர் காங்கிரசார். இவர்களில் 12 பேர்கள் தி. த. நா. காங்கிரஸைச் சேர்ந்தவர்களாகும்.

இரண்டாம் திட்டத்திற்காக ரூ. 500 கோடி வரை புதுவரி விதிப்பு

புதுடில்லி, நவ. 3—

இதுகாறும் இரண்டாம் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கென சுமார் 350 கோடி ரூபாய்வரை புதிய வரி விதிப்பு இருக்கும் என்று கூறப்பட்டு வந்தது. இப்போது மேலும் ரூ. 150 முதல் ரூ. 200 கோடி வரை புது வரி விதிப்பு இருக்கும் என்று கூறப்படுகிறது.

நிதி மந்திரி தேஷ்முக், ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான நிதி நிலைகள் குறித்துப் பேசியபோது, இந்த தகவலை வெளியிட்டிருக்கிறார்.

சுமார் ரூ. 500 கோடி வரை புது வரி விதிப்புச் சுமைகளை, இரண்டாம் திட்ட காலத்தில் மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்குமாம்.

★

அமைச்சரின் விளக்கம்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு சுமார் ரூ. 4,800 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது; இது, முதலில் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தைவிட ரூ. 500 கோடி அதிகமாகும். இந்தப் பெரிய திட்டமும் அனேகமாக 5 வருடங்களிலேயே நிறைவேற்றப்படும்."

நிதி வசதிக்கு வகை செய்வது சம்பந்தமாக பத்திரிகை நிருபர்களிடத்தில், நிதி அமைச்சர் தேஷ்முக் மேற்கண்டவாறு கூறிவிட்டு மேலும் பின்வருமாறு கூறினார்:—

"முதலில் உத்தேசித்தபடி; திட்ட மதிப்பு ரூ. 4,300 கோடியாக இருந்தாலும்கூட அதிகப்படியாக ரூ. 800 கோடி எழுப்ப வேண்டியிருக்கும். பணம் கிடைப்பது கஷ்டமென்று தோன்றவில்லை. இந்த ரூ 800 கோடியையும் வரி போட்டுத்தான் எழுப்ப வேண்டுமென்பதல்ல; தற்போதைய உத்தேசப்படி, ரூ. 150 கோடிக்குத்தான் அதிகப்படி வரி போடப்படும். பாக்கிக்கு கடன் எழுப்புதல் மூலமும், சிறு சேமிப்பு மூலமும் பெறவேண்டும். அனேகமாக எதிர்பார்த்ததற்கு மேலேயே நிதி கிடைக்கும்.

பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில், இன்ஷ்யூரன்சை சர்க்கார் எடுத்துக்கொள்வது பற்றி தீவிரமாக யோசித்து வருவதாகவும், இன்னும் ஒரு முடிவும் செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலை அப்படியே சர்க்கார் எடுத்துக்கொள்ள உத்தேசமில்லையென்றும், ஆனால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகப்படியான நிலக்கரி உற்பத்தி சர்க்கார் மூலமே செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

மதுவிலக்கு பற்றி கூறுகையில், ரூ. 155 கோடிவரை நஷ்டமேற்படுமென்றும், இதனால் மக்களுக்கு மிச்சமாகும் பணம், சிறு சேமிப்புக்குச் சென்று விடாதென்றும், துணி போன்ற அத்தியாவசியத் தேவைகள் வாங்குவதற்கு மக்களால் செலவிடப்படும் என்றும் கூறினார்.

உப்பு வரி உண்டா?

"மது விலக்கு மூலம் ஏற்படும் வருமான நஷ்டத்தை ஈடு செய்ய உப்பு வரி போட முடியுமா?" என்று கேட்கப்பட்டதற்கு, 'அது சாத்தியமில்லை; உப்பு வரி அநேகமாக செத்துவிட்டதென்றே கூறலாம்' என்று கூறினார்.

மாநிலங்களிடை விற்பனை வரி

வரி விசாரணைக் குழுவின் சிபாரிசுகளின்படி மாநிலங்களிடை விற்பனை வரி விதிக்க சட்டம் கொண்டுவர மத்திய சர்க்கார் தீர்மானிக்க வேண்டியிருக்குமென்றும், இதை மாநில சர்க்கார்களும், தொழில் பிரமுகர்களும் வரவேற்பர் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

தேயிலைத் தொழில்: சர்க்கார் நிலைமை என்ன?

"தேயிலைத் தொழிலை சர்க்கார் ஏற்பதற்கான திட்டம் எதுவுமில்லை; இவ்வாறு கூறுவதால், தேயிலைத் தொழிலை சர்க்கார் எடுத்துக்கொள்ளாது என்று, திட்டமாகத் தீர்மானித்துவிட்டதாகவும் முடிவு செய்யக்கூடாது."

அந்நிய நாடுகளில் கடன் எழுப்பப்படுமா?

அந்நிய நாடுகளிலிருந்து கடன் எழுப்புவது சாத்தியமா என்பது பற்றி மேலெழுந்தவாரியாக பரிசீலிக்கப்பட்டதாகவும், தற்போதைய நிலையில் கடன் வாங்க உத்தேசமில்லை என்றும் கூறினார்.

'பற்றாக்குறையாகவுள்ள ரூ 400 கோடி முழுவதையும் அமெரிக்கா கொடுக்கத் தயார்' என்று, அமெரிக்கத் தூதுவர் மைசூரில் குறிப்பிட்டது பற்றி சுட்டிக்காண்பித்து, 'இந்தியா அந்நாட்டிலிருந்து கடன் வாங்க முயற்சிக்குமா?' என்று கேட்கப்பட்டதற்கு, இது கொள்கை பற்றிய பிரச்சினையென்றும். பல அம்சங்களையும் கவனிக்க வேண்டுமென்றும், திட்டமாக இப்பொழுது ஒன்றும் கூறுவதற்கு இயலாது என்றும் கூறினார்.

கட்டுமரங்கள் இனி இராது?

புதிய முறைப் படகுகளைப் பயன்படுத்த முயற்சி

சென்னை, நவ. 2—

மீன்பிடிப்புத் துறையில், கட்டுமரங்களுக்குப் பதிலாகப் புதிய முறையில் செய்யப்பட்டுள்ள படகுகளைப் பயன்படுத்துவதற்கு சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இம்மாதிரியான படகு ஒன்றைக் கட்டுவதற்கு ரூ 4,000 முதல் ரூ. 4,500 வரை செலவாகிறதாம்.

மீனவர்களிடையே இப்படகுகள் தன்மை பற்றி எடுத்துக்கூறுவதற்கு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாம். இப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டதும், வாடகைமுறையிலும், 'சப்சிடி' அடிப்படையிலும் சர்க்காரால் மீனவர்களுக்கு அளிக்கப்படுமாம்.

3,800 சதுர மைல் பரப்பில் நிலக்கரி

தெலிங்கானவில் கிடைப்பதாகக் கண்டுபிடிப்பு

ஐதராபாத், நவ. 2—

ஐதராபாத்தில் உள்ள தெலுங்கு வழங்கும் பகுதிகளில் சுமார் 3,800 சதுர மைல் பரப்பளவில் ஏராளமான நிலக்கரி கிடைப்பதாக இந்திய சுரங்க இலாகாவினர் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தெரிய வந்திருக்கிறதாம்.

இந்த இலாகாவைச் சேர்ந்த ஒ. பி. டட் என்ற அதிகாரி இது குறித்துத் திட்டக் குழுவிடம் அறிக்கை ஒன்று தாக்கல் செய்தாராம்

இந்த நிலக்கரிச் சுரங்கங்களைப் பயன்படுத்துவதானல், மத்திய பிரதேசத்தில் பாஸ்டர் எனுமிடத்தில் கிடைக்கும் இரும்புக் கனிகளைக் கொண்டு, ஐதராபாத் மாநிலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைக்க உதவ முடியும் என்றும் கூறப்படுகிறது.

கையால் செய்யப்படும் காகிதங்கள்

சென்னை சர்க்கார் நடவடிக்கை

கையால் தயாரிக்கப்படும் காகிதங்களை சர்க்கார் காரியாலயங்களில் பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதற்காக சென்னை சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறதாம்

இந்தியாவின் நிலப் பரப்பில் சுமார் நாலில் ஒரு பாகம் வனப் பிரதேசமாகும். ஆனல், வனப் பிரதேசத்தில் சுமார் 57 சதவிகிதம்தான் உபயோகத்தில் இருந்து வருகிறது.

பர்மாவில் இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

வெளிநாட்டுத் தூதுவர்களும் கைது செய்யப்படுகின்றனர்

ரங்கூன், நவ. 2—

கெய்ரோவில் உள்ள பர்மியத் தூதுவரான யூ-சோ-தின் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர், கராச்சியிலிருந்த பர்மியத் தூதுவரான யூ-சா-வின் என்பவர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கில் தொடர்புடையவர் என்பதாலேயே யூ-சோ-தின் கைது செய்யப்பட்டிருக்கிறாராம்.

கடந்த மாதத்தில் யூ-சா-வின் கைது செய்யப்பட்டது, இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் என்பது நினைவிலிருக்கலாம்.

1952—54-ம் ஆண்டுகளில், யூ-சா-வின் பாரிசில் தூதுவராயிருந்தார். அப்போது அவர் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் வரையில் மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

அந்தக் காலத்தில் இப்போது கைது செய்யப்பட்டுள்ள யூ-சோ-தின், பாரிசில் பர்மியத் தூதுவராலயத்தில் இரண்டாவது செயலாளராயிருந்தாராம்.

மாஸ்கோவில் பர்மியப் பிரதமர்

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் விருந்து

மாஸ்கோ, நவ. 1—

சோவியத் ரஷ்யாவில் இரு கிழமைகளாக சுற்றுப் பயணம் செய்து வரும் பர்மியப் பிரதமர் யூ-நூ இன்று மாஸ்கோ வந்து சேர்ந்திருக்கிறார்,

பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் தூதுவர்கள் ஒன்று கூடி, பர்மியப் பிரதமருக்கு ஒரு விருந்து நடத்தியிருக்கின்றனர்.

அந்த விருந்தில் பிரதமர் யூ-நூ, 'அடுத்து நடைபெறும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாடுகளில் ரஷ்யாவும் கலந்து கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அப்போது, சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் நிகிதா குருஷ்சேவ் குறுக்கிட்டு, 'அத்தகு மாநாடுகளில் சோவியத் கலந்துகொள்வது, சமாதானத்திற்கு உறுதுணையானதாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனல், பிரதமர் புல்கானின் பேசுகையில், மிகவும் எச்சரிக்கையுடன் பேசியதாகக் கூறப்படுகிறது.

பர்மியப் பிரதமர் மேலும் பேசுகையில், சோவியத் நாட்டின் பல பகுதிகளும் வாழ்க்கைமுறை, சிந்தனை இவற்றில் ஆசிய நாடுகள் பலவற்றை ஒட்டியதாயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

பாண்டுங் மாநாட்டின் முடிவுகளை ரஷ்யா முழுமனதுடன் வரவேற்கிறது — ஏற்றுக்கொள்கிறது என்பதை, சோவியத் தலைவர்கள் இந்த விருந்தில் கலந்துகொள்ளுவதே எடுத்துக் காட்டுவதாய் அமைகிறது என்றும் மார்ஷல் புல்கானின் குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

ரஷ்யாவும் முன்வருகிறது

புதுடில்லி, நவ 2—

ஆக்க வேலைக்கு அணுசக்தியை உபயோகிப்பதில், ரஷ்யா அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காண்பிக்கும் காட்சி ஒன்றை இந்தியாவில் நடத்துவதற்கு ரஷ்யா முன்வந்துள்ளது. இதற்கான புதிய பகுதி ஒன்று, டில்லியில் நடைபெறும் பொருட்காட்சியில் திறக்கப்படுமாம்.

ரஷ்யாவில் மருத்துவம், விவசாயம், கைத் தொழில்கள் ஆகியவற்றில் அணுசக்தி எவ்வாறு உபயோகப்படுகிறது என்பது இந்தக் காட்சியில் காட்டப்படுமாம்.

பொருட்காட்சியின் அமெரிக்கப் பிரிவில் அணுசக்தி காட்சிகள் வைத்திருப்பது நினைவிற்கொள்ளத்தக்கதாகும்.

ஐக்கிய கர்நாடக அமைப்பு

எதிர்ப்பாளர்களுக்கு அனுமந்தையா விளக்கம்

பெங்களூர், நவ. 3—

மைசூரின் பலவகைத் தன்மையைக் காப்பாற்றுவதுடன், அடுத்துள்ள மக்கள் தாமாகவே விரும்பி மைசூருடன் இணைவதானல்தான், ஐக்கிய கர்நாடக அமைப்பை தான் ஆதரிப்பதாயும், மொழிவழி அடிப்படையை மட்டும் ஆதாரமாகக்கொண்டு ஆதரிக்கவில்லை என்றும் முதன் மந்திரி அனுமந்தையா விளக்கம் தந்திருக்கிறார்.

நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்.

"ஐக்கிய கர்நாடகம் அமைவதை முதன் மந்திரி ஆதரித்து வந்திருக்கிறார்; தொடர்ந்து அதே கருத்தை அவர் கொண்டிருக்கிறாரா?" என்று கேட்கப்பட்டபோது, முதன் மந்திரி அனுமந்தையா கூறியதாவது:—

"தொடர்புடைய பகுதிகளையும் இணைத்து மைசூர் விரிவாக்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன்; ஆனல், முழுவதும் மொழி அடிப்படையில் மாநிலம் அமையவேண்டுமென நான் கூறவில்லை. அதே போது, 'மைசூரின் கலப்புத் தன்மை காப்பாற்றப்படவேண்டும்' என்று கூறிவந்திருக்கிறேன். இந்தக் கலப்புத்தன்மையும், நிர்வாக வசதியும்தான் அடுத்துள்ள பகுதிகள் மைசூருடன் இணைவதற்கு அடிப்படையாக இருக்கவேண்டும்

"நிர்வாக வசதி குறித்து நிர்ணயம் செய்ய யார் நீதிபதிகளாயிருக்க முடியும்? தொடர்புடைய பகுதி வாழ் மக்கள்தானே நீதிபதிகளாயிருக்க முடியும்? அதனல்தான், மைசூர், எப்போதும் மண் ஆசை கொண்ட கொள்கையைப் பின்பற்றாமல் வந்திருக்கிறது. தொடர்புடைய மக்கள் தங்கள் விருப்பங்களைத் தெளிவாக—சுதந்திரமாக தாங்களே தெரிவிக்கும்போது, அவர்களை நான் மனதார வரவேற்கிறேன். மாநிலக் குழுவினர், மைசூருடன் இணைய வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ள பகுதிகளில் வாழும் மக்கள் எல்லாம் தாங்கள் மைசூருடன் இணைய விரும்புவதாக ஒருமுகமாகத் தெரிவித்திருக்கின்றனர்; எனவேதான், அனேகமாக எல்லா கன்னடியரும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது."

"'ஐக்கிய கர்நாடகம்' என்பதற்குப் பதிலாக 'மைசூர்' என்ற பெயரே நீடிக்குமானல், இப்போதிருக்கிற எதிர்ப்பு மறைந்துவிடும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று கேட்டபோது, முதன் மந்திரி குறிப்பிட்டதாவது:—

"சிக்கலுக்கு முடிவு காண அது வழி என்று கூறப்படுமானல், கருத்து வேறுபாடு கொண்டோர் அதனல் ஒருமுகக் கருத்துடையோராவர் என்றால், நான் அதற்காகப் பாடுபடுவேன்."

ஆரஞ்சுப் பழத்திற்குப் பதில் எண்ணெய்!

ரஷ்யா—இஸ்ரேல் பண்டமாற்று திட்டம்

மாஸ்கோ, நவ. 3—

இஸ்ரேல் நாட்டின் ஆரஞ்சுப் பழங்களுக்குப் பதிலாக ரஷ்யாவிலிருந்து 'குரூட்' எண்ணெயும், எரி எண்ணெயும் இஸ்ரேல் வாங்குமென்று கூறப்பட்டுள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பு

பிரெஞ்சுப் பிரதமர் வெற்றி

பாரிஸ், நவ. 3—

விரைவிலேயே பிரான்சில் பொதுத் தேர்தல் நடத்தக்கோரும் மசோதா மீது, பிரெஞ்சு சட்டசபையில் பிரதமர் பாரே நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார். பிரதமரின் பிரரேபணைக்குச் சாதகமாக 830 வாக்குகளும், எதிராக 111 வாக்குகளும் கிடைத்தன.

இந்தியாவுக்குக் 'கண்ணாடி மனிதன்'

ஜெர்மன் சர்க்கார் அன்பளிப்பு

புதுடில்லி, நவ. 2—

ஜெர்மன் ஜனநாயக சர்க்கார் இந்தியாவுக்குக் 'கண்ணாடி மனிதன்' 'சீய்ஸ் நட்சத்திர மண்டலம்' ஆகிய இரு அபூர்வ காட்சிப்பொருள்களையும் அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த இரு பொருள்களும் இப்போது டில்லியில் நடைபெறும் சர்வதேச தொழில் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அக்காட்சி முடிந்தவுடன் அவை இந்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்படும்.

கண்ணாடி மனிதன்

மனித சரீரத்தின் உள் அமைப்புக்களை விளக்கிக் காட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி மனிதனின் எடை 62 பவுண்டு; அதன் உயரம் 5 அடி 9 அங்குலம். சரீரக் கூடும், உள் உறுப்புக்களும் 'செல்லோன்' சாதனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உடலுக்குள் நல்ல இரத்தம், அசுத்த இரத்தம் ஆகியவைகளைக் கொண்டு செல்கிற நாளங்கள், குழாய்கள், உணர்ச்சிகளை அறிவிக்கிற நரம்புகள் முதலியவை சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய நிறக் கம்பிகளால் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு உறுப்பையும் பற்றி விளக்கிக் காட்டும்போது, கண்ணாடி மனிதனுக்கு உள்ளே அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் மின்சார பல்புகள் தாமாகவே எரியும். வர்ணனைகள் எல்லாம் ஏற்கனவே 'டேப் ரிக்கார்டர்' மூலம் இயந்திரத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, ரிக்கார்டர் மூலம் விளக்க வர்ணனை நடத்தப்படுகிறது.

மூளை, குரல் வளை, நுரையீரல், இருதயம், தொண்டை முதலிய உறுப்புக்கள் பற்றி எல்லாம் விவர நுட்பங்கள் தரப்படுகின்றன.

பத்து நிமிட வர்ணனை முடிவில் பின்வருமாறு கூறப்படுகிறது:—

"எல்லா உறுப்புக்களும் நன்றாக இணைந்து வேலை செய்தால் உடல் நலம் நன்றாக இருக்கும்; வியாதிகளை எதிர்ப்பதற்கு உடலுக்கு வலு உண்டாகும். இந்த ஒத்துழைப்பு இலட்சியத்தை எல்லா நாட்டு மக்களும் தங்கள் சொந்த வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் தங்கள் வாழ்க்கை இலட்சியமாகக் கடைபிடிப்பார்களாக. அவ்வாறு செய்தால், எதிர்காலத்தில் மனித வாழ்க்கை, சமாதானம், நட்பு, உடல் நலம், மகிழ்ச்சி ஆகியவை நிறைந்ததாக இருக்கும்."

நட்சத்திர மண்டலம்

நட்சத்திர மண்டலக் கூண்டில் உண்மையாக வான மண்டலத்தில் உள்ள அவ்வளவு நட்சத்திரங்களையும், கோளங்களையும் காண்பது போல் பார்க்கலாம். கூண்டு போன்ற அமைப்பில் உள்ளே இருக்கும் வெள்ளைத் திரையில் வானத்து நட்சத்திரங்களையும் சூரியனையும், சந்திரன் முதலிய கோளங்களையும் படமாகப் பார்க்கலாம். சுமார் 5,000 நட்சத்திரங்கள் அதில் காட்டப்படுகின்றன.

'பூராடம்-சு' அல்லது 'மில்கி வே' என்னும் வெள் நரைப் படலமும் விசேடமாகக் காட்டப்படுகிறது. நட்சத்திரங்கள் முதலியவைகளைக் காட்டுவதற்காக 'ஆப்டிகல் புரொஜெக்டர்கள்' வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆந்திரா சென்னை பேச்சுக்கள் முறிவு

எல்லை நிர்ணயத்தில் இருதரப்பு பிரதிநிதிகளுக்கும் கருத்தொற்றுமை!!

ஓசூர் சிக்கலை முடிவெடுக்காததற்குக் காரணம்

சென்னை, நவ. 4—

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இரு மாநிலங்களின் பிரதிநிதிகளும் நேற்று துவங்கிய பேச்சுவார்த்தைகள், இன்று முடிவேதும் காணாமலே முடிந்துவிட்டிருக்கின்றன.

'எந்த ஒரு மொழி பேசுபவர்களும் தனித்துப் பெருவாரியாக இல்லாத ஓசூர் வட்டம் பற்றியும் இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது விவாதிக்கவேண்டும்' என்று, ஆந்திரப் பிரதிநிதிகள் விரும்பியதாயும், அதனை சென்னைப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ள இயலாது என்று தெரிவித்ததாயும், அதனாலேயே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற இயலாது போய் விட்டது என்றும் இரு மாநில முதன் மந்திரிகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை கூறுகிறது.

மேலும், இது குறித்து ஒரு முடிவுக்கு வர ஆந்திர சர்க்காருக்கு ஒரு திங்கள் தவணை வேண்டுமெனக் கோரப்பட்டது என்றும், அதற்கு சென்னை சர்க்கார் இணங்கியிருப்பதாயும் அந்த அறிக்கை கூறுகிறது.

பெருவாரியான மக்கட்தொகை, வட்டாரத் தொடர்பு எல்லைத் தொடர்பு, நீர்ப்பாசனத் திட்டங்களைப் பாதிக்காத நிலை—முதலிய அடிப்படையில் எல்லை வகுக்கப்படவேண்டும் என்றும், செங்கற்பட்டு, வட ஆற்காடு, சித்தூர், நெல்லூர் ஆகியவற்றில் மாநில எல்லைகளை வகுப்பதில் இந்த அடிப்படை, கொள்கை அளவில் பொதுவாக இருதரப்பு பிரதிநிதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

ஆந்திர முதன் மந்திரி, தான் மீண்டும் அடுத்த திங்களில் சென்னை முதன் மந்திரியைச் சந்திக்கலாம் என்றும், இப்போது பேச்சுவார்த்தைகளில் முடிவு காணாது போய்விட்டது வருந்தற்குரியதே என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த எல்லைத் தகராறுகள் மத்திய சர்க்காரின் தலையீடின்றியே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று இருதரப்பினராலும் எண்ணப்பட்டாலும், எல்லைக் குழு ஒன்று இல்லாது, இதற்கு சுமுகமான முடிவு ஏற்படுவது கடினம் என்றும் கூறப்படுகிறது.

ஷேக் அப்துல்லா!

ஸ்ரீநகர், நவ. 4—

காஷ்மீரின் முஸ்லிம் மத உயர் தர டிரஸ்டான 'மஜ்லிஸ் ஆக்கப் இஸ்லாமியா' என்ற நிறுவனத்தின் தலைவராக இருந்த காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லா, இப்போது நடைபெற்ற தலைவர் தேர்தலில் தோற்றுவிட்டிருக்கிறார்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பதவிதான் அவர் கடைசியாக வகித்துக்கொண்டிருந்த பொது நிறுவனப் பதவியாகும்.

'ஷேக் அப்துல்லாவே தொடர்ந்து அந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கவேண்டும்' என்று, அவரது சகாக்கள் சிலர் முயற்சித்தனர்; ஆனால், 196 உறுப்பினர்கள் அவருக்கு எதிராக வாக்களித்துத் தோற்கடித்திருக்கின்றனர்.

இப்போது ரெவினியூ மந்திரியாயிருக்கும் சையத் மீர் காசிம் என்பவரை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட முதன் மந்திரி பக்ஷி குலாம் எந்த ஒரு மத நிறுவனமும் அரசியல் காரியங்களுக்காக உபயோகிக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த மத நிறுவனத்தின் கீழ் தான், காஷ்மீரில் உள்ள எல்லா பெரிய மசூதிகளும், முகம்மதிய ஆலயங்களும், அவற்றின் சொத்துக்களும் உள்ளன.

புதுவகை பெனிசிலின்

உலக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

வாஷிங்டன், நவ. 5—

பலவித நோய்களுக்கு ஒரு புது வகைப் பெனிசிலினை உபயோகிப்பதால் ஏற்படும் நலன்களைப் பற்றி இங்கு கூடியுள்ள 16 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

புதுவகைப் பெனிசிலினால் நன்மைகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது அதனை, ஊசி குத்தாமல் வாயில் மருந்தாகக் கொடுத்து விடலாம்; அதுவும் ஒரு நன்மை.

நகரை கவர்ச்சிகரமானதாக்க

சர்க்கார் உத்தேசிக்கும் திட்டங்கள்

சென்னை, நவ. 4—

சென்னை மெரினா கடற்கரை, சர்க்கார் 'எஸ்டேட்', மவுண்ட் ரோடு ஆகியவற்றை கவர்ச்சிகரமானதாக்கும் திட்டம் குறித்த சென்னை மந்திரி சபையினர் விவாதித்திருக்கின்றனர்.

நகரமைப்புத் திட்ட நிபுணர் மிர்சா இஸ்மாயில், நகர சபை நிர்வாக அதிகாரி ஆகியோரும் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

அழகான பூங்கா பாதைகள் கொண்ட ஒரு மீன் காட்சி சாலையை மெரினாவில் அமைப்பது ஆதம் சாலையை எதிர்த்தாற்போல, சர்க்கார் வெளியில் திறந்த வெளி அரங்கம் ஒன்றைக் கண் கவர் தோட்டங்களுடன் அமைப்பது போன்றவை சர்க்கார் உத்தேசிக்கும் திட்டங்களாகும். இத்திட்டங்களுக்கு ரூ 3 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மத எதிர்ப்பு பிரச்சாரம்

ரஷ்யாவில் மும்முரமாகிறது!

லண்டன், நவ. 5—

தெற்கு யுக்ரேனைச் சேர்ந்த ஒடெசா பிரதேசத்திலுள்ள கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இன்னும் கடுமையாக மத எதிர்ப்புப் பிரசாரம் செய்யவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஒன்று கூறுகிறது.

ஒடெசா வானொலி பின்வருமாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறதாம்:—

"சிறிது காலத்துக்கு முன், மத எதிர்ப்புப் பிரச்சாரத் துறையில் பெரிய வேலை நடைபெற்றது; இப்பொழுதோ, அதன் தீவிரம் மிகவும் குறைந்திருக்கிறது. மத எதிர்ப்புப் பிரசாரத்தை மிகவும் அதிகமாகச் செய்வது கட்சி நிறுவனங்களின் கடமையாகும். அதனைப் பெரும் போராகவும், ஆக்கிரமிப்பாகவும் கருதி நடத்த வேண்டும்."

சென்னைக் கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டிற்கு நிதி அளிப்பதற்காக 6-11-55 அன்று மாலை திரு. வி. க. திடலில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டம், சில எதிர்பாராதகாரணங்களால் ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக தோழர் டி எஸ். சண்முகம் அறிவிக்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் திருவெண்காடு வருகை

7—11—55 மாலை 5½ மணிக்கு திருவெண்காடு, மேல வீதியில், தோழர் சீ. கேசவன் தலைமையில் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் என். கிட்டப்பா ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

★

நாச்சியார்கோவில்

வருகை

8—11—55-ல், நாச்சியார் கோவில் கீழ வீதி தேரடியில், தோழர் கு. நாராயணசாமி தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

இராமச்சந்திரபுரம் (பெங்களூர்)

தி மு கழகத் துவக்க விழாச் சிறப்புக் கூட்டம்

சர். புட்டண்ணா செட்டி டவுன் மண்டபத்தில்

6—11—55 மாலை 3 மணிக்கு

தலைவர்: எஸ். வி. பதி

பேசுவோர்:

கி. மனோகரன்
ந. இராமசாமி
அருண்மொழி

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

நவ.	5	சத்திரப்பட்டி (ராஜபாளையம்)
	6	சுந்தரம்பாண்டியம்
	7	மதுரை (ஓய்வு)
	9	கொழிஞ்சம்பாறை சித்தூர் (திரு—கொ) —சென்னை இணைப்பு மாநாடு
	12	சென்னை — நாடகத் தலைமை
	13	திருப்பாலக்குடி (தஞ்சை)
	27	சென்னை-செம்பியம்
	28	அரியலூர்

இலக்கிய ஆராய்ச்சி கூட்டம்

6-11-55 பிற்பகல் 3 மணிக்கு, மாணவர் மன்றச்சார்பில், சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 32, ஆயலூர் முத்தையா முதலி தெருவில், திரு. எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். திருமுருகாற்றுப் படையினைப் பற்றி திரு. மயிலை சிவமுத்து, மற்றும் பலர் பேசுவர்.

சென்னை கல்விச் சங்கம்

6—11—55 மாலை 5 மணிக்கு. சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு ஆண் பள்ளியில், 'குறள் உவமைகள்' என்னும் பொருள் பற்றி, திரு. வ சுப்பிரமணியம் தலைமையில், திரு. தொ. ரா. ஜெயராமன் பேசுவார்.

சட்ட சபைத் தலைவர்கள் பொறுப்பு

மாநாட்டில் மாவ்லங்கர் விளக்கம்

ஷில்லாங், நவ. 2—

இந்தியாவில் உள்ள சட்டசபை தலைவர்களின் மாநாடு ஷில்லாங்கில் மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கர் தலைமையில் இன்று ஆரம்பமாயிற்று.

எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவையாயிருப்பினும், சர்ச்சைகளில் சட்டசபைத் தலைவர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்றும், மாநிலக் குழு சிபாரிசுகள் பற்றி கட்சி மனப்பான்மை காட்டக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டாராம்.

"சபைத் தலைவர்கள் பாரபட்சமின்றி நடந்துகொண்டால் மட்டும் போதுமானதல்ல; சர்க்காரின் தயவை எதிர்பார்த்தலோ, அதிருப்தியைப் பொருட்படுத்தவோ கூடாது; அதற்கான நெஞ்சுரம் பெற்றவர்களாகவுமிருக்க வேண்டும்; அப்போதுதான் 'பார்லிமெண்டரி' ஜனநாயகம் வெற்றி பெற முடியும்" என்றும் அவர் தெரிவித்தாராம்.

ஒரிசா கவர்னரின் நூல் நிலையம்

இந்திய சர்க்கார் வசம் ஒப்படைக்கப்படுமாம்

பெர்ஹாம்பூர், நவ 4—

ஒரிசாவில் கவர்னராகவுள்ள சென்னை முன்னாள் முதன் மந்திரி பி எஸ் குமாரசாமி ராஜாவிற்குச் சொந்தமான நூல் நிலையம், நவம்பர் 16-ந் தேதியன்று இந்திய சர்க்கார் வசம் ஒப்படைக்கப்படும் என்றும், இந்தப் புத்தகசாலை இராஜபாளையத்தில் உள்ளது என்றும், இந்த விழாவை குடியரசுத் தலைவர் இராசேந்திரர் துவக்கிவைக்கவும், காங்கிரஸ் தலைவர் தேபர் தலைமை தாங்கவும் கூடும் என்றும், ஒரிசா முதன் மந்திரி சௌத்ரியும் விழாவில் கலந்து கொள்ளவும் கூடும் என்றும் தெரியவருகிறது.

சயாம் - பர்மா எல்லை மூடப்படுகிறது!

பாங்காங், நவ. 4—

சயாம்—பர்மிய எல்லையை மூடிவிடுமாறு, சயாம் பிரதமரான மார்ஷல் பீபுல் சாங்க்ராம் அறிவித்திருக்கிறாராம்.

இந்த மூடுவிழாவிற்குக் காரணம் எதுவும் கூறப்படவில்லை.

ஆனால், இந்த வழியாக கஞ்சா கடத்தப்படுவதையும், யூன்னானியினர் சயாம் எல்லையுள் புகுந்து கொள்ளையடிப்பதையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை தான் அது என்று நம்பப்படுகிறதாம்.

இதுவன்னியில், இந்த எல்லை வழியாக, கரேன் புரட்சிக்காரர்கள் சயாமுக்குள் நுழைவதையும், சயாம் மக்கள் சிலர் வட பர்மாவில் உள்ள கெங்டன் எனுமிடத்தில் சூதாடச் செய்வதையும் பழக்கமாகக் கொண்டிருக்கின்றனராம்.

படித்தவரிடை

வேலையில்லாத் திண்டாட்டம்

திருவனந்தபுரம், நவ. 4—

படித்த மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி ஆராய்ந்து, அதனை ஒழிக்க வழி வகைகூறுமாறு ஆறுபேர்கொண்ட குழு ஒன்றை திரு-கொச்சி சர்க்கார நியமித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

எவ்வளவு தெரியுமா!

இவ்வாண்டு ஜனவரி-செப்டம்பர் மாதங்களில் பிரிட்டனிலிருந்து 4,16,000 பவுன்கள் மதிப்புள்ள காரியாலய சாதன இயந்திரங்களை இந்தியா கொள்முதல் செய்திருக்கிறது. சென்ற ஆண்டு இதேகாலக் கொள்முதல் மதிப்பு சுமார் 2,00,000 பவுன்கள்தான்.

அறிவிப்பு

கடிதம் வரையும் தோழர்கள் இனி எனது கீழ்ச்சண்ட முகவரிக்கே எழுத வேண்டுகிறேன்.

அன்பன்'
காஞ்சி கல்யாணசுந்தரம்,
'நம் நாடு', சென்னை-13
5—11—55

சேது சமுத்திர திட்டம்

பரிசிலனை செய்வதற்கு குழு நியமனம்

புதுடில்லி, நவ. 5—

சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்ற முடியுமா என்று பரிசீலனை செய்வதற்காகவும், அது பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும் இந்திய சர்க்கார் நிபுணர் குழுவொன்றை நியமித்திருக்கிறது.

இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையேயுள்ள மன்னார்குடாக் கடல், பாக் வளைகுடா ஆகியவைகளுக்குத் தொடர்பு ஏற்படும்படி 'ஆடம்ஸ் பிரிட்ஜ்' அருகில் ஒரு கால்வாய் வெட்டுவதற்கு இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேறுமானால், தூத்துக்குடி துறைமுகத்தின் வசதி பெருகும். ஆழ்கடல் கப்பல்கள் பத்திரமாக அங்கே வந்து போவதற்கு வசதியேற்படும். இந்தியாவில் மேல்கரைக்கும் — கீழ்க்கரைக்குமிடையே கப்பல்கள் செல்வதற்குள்ள தூரமும் குறையும்.

திரு வ. இராமசாமி (முதலியார்) அவர்கள் குழுவின் தலைவராவார்.

இந்தியாவின் துறைமுக அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூ. 50 கோடி செலவிடப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதில் ரூ. 45 கோடி பெரிய துறைமுகங்களுக்கும், ரூ. 5 கோடி சிறிய துறைமுகங்களுக்கும் செலவிடப்படும். அத்திட்டப்படி தூத்துக்குடி, மங்களூர் துறைமுகங்கள் விரிவாக்கப்படும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய குகைப்பாதை!

ஷில்லாங், நவ. 4—

ஜம்மு மாநிலத்தை காஷ்மீர் பள்ளத்தாக்குடன் இணைப்பதற்காக, ஒரு மைல் நீளத்திற்கு மேலான குகைப்பாதை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறதாம்.

7,500 அடி உயரத்தில் ரூ. 3 கோடி செலவில் இப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது என்றும், ஆசியாவிலேயே மிகப் பெரிய குகைப் பாதை இதுதான் என்றும், காஷ்மீர் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் சாதிக் தெரிவித்திருக்கிறாராம்.

டல்லஸ்—சூ சந்திப்பு

அமெரிக்க அரசாங்க மந்திரி ஜான் பாஸ்டர் டல்லசும், சீனப் பிரதமர் சூ-என்-லாயும், அண்மையில் சந்தித்துப் பேச வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இருவருக்குமிடையே கடிதப் போக்குவரத்து கடந்த சில வாரங்களாக நடைபெற்றதாயும், அதன் விளைவாகவே இந்தச் சந்திப்பு நிகழக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் அலுமினியம் உற்பத்தி, 1954-ம் ஆண்டின் இரண்டாவது கால் வருடத்தில் 927.9 டன்னாக இருந்தது—1955-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் கிட்டத்தட்ட இரு மடங்கு உயர்ந்து 1,865.8 டன்னாகப் பெருகிவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன எம் ஏ.